Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 262

செவ்வாய்க்கிழமை 15 ஓகஸ்ட் 2023

ஆடி 30 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

தமிழ்த் தீவிரவாதிகளிடமிருந்து

# குருந்தூர்மலையைப் பாதுகாக்க சிங்களவர்களே திரண்டுவருக!

விகாராதிபதி உசுப்பேத்தல்

**முல்லைத்தீவு, ஓகஸ்ட் 15**

குருந்தூர்மலை ஆதிசிவன் ஆலயத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொங்கலுக்கான அழைப்புவிடுக்கப்பட்டுள்ள நிலையில், 18, 19, 20 ஆம் திகதிகளில் பௌத்த வழிபாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தமிழ்த் தீவிரவாதிகள் குருந்தூர் விகாரையைச் சேதப்படுத்தவுள்ளார்கள் என்பதால் சிங்களவர்களை அணிதிரண்டு வருமாறும் விகாராதிபதி அழைப்பு விடுத்துள்ளார். »11

மடுத்திருவிழா

## இன்று ரணிலும் பங்கேற்பு

மன்னார், ஓக. 15
மன்னார் மாவட்டத்தில் பிர »11

மடுத் திருத்தலத்தில்

## விஷஜந்து தீண்டியதில் இளைஞன் உயிரிழப்பு



மன்னார், ஓக. 15
மன்னார்மடுதிருத்தலத்தில்நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு, மன்னார் கத்தோலிக்க ஊடகத்தின் இணைப்புத் தொகுப்பாளர் ஜெகநாதன் »11

வீதி ஒளிச்சமிக்ஞையில்

## அவசரப்பட்ட டிப்பரால் பெண்ணின் உயிர்பறிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 15
கோப்பாய் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் சமுர்த்தி வங்கி முகாமையாளரான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். கோப்பாய் தெற்கைச்சேர்ந்த »11



## ஜப்பான் தூதுவர் முன்பாக மயங்கிச் சரிந்த மாணவி

காலை உணவு உண்ணாமல் வந்தமையால் இந்த நிலைமை

கிளிநொச்சி, ஓக. 15
ஜப்பானியத் தூதுவரை.வரவேற்க காத்திருந்த பாண்ட் அணி மாணவி நேற்று மயங்கி »11

வடக்கு - கிழக்கில்

## 600 கல்வெட்டுக்கள் கண்டுபிடிப்பு!

ஆனால் இன்னமும் ஆராயப்படவில்லை

கொழும்பு, ஓக. 15
வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட இன்னமும் ஆய்வுக்குட்படுத்தப்படாத 600 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. பேராசிரியர் செனரத் பரணவிதாரனவுக்குப் பின்னர் கல்வெட்டுக்களைப் புரிந்துகொள்வதற்குப் »11



## இராணுவ முகாமை அகற்ற வேண்டாமாம்

கற்கோவளத்தில் விநோதப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 15
பருத்தித்துறை, கற்கோவளத்திலுள்ள 16 ஆவது காலால் படையணியின் இராணுவ முகாமை அகற்றவேண்டாம் எனக்கூறி பிரதேச மக்கள் சிலர் இராணுவ முகாமுக்கு முன்னால் »11

## சிறப்புற இடம்பெற்ற மாவைக்கந்தன் தேர்

யாழ்ப்பாணம், ஓக. 15
வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த காம்யோற்சவப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா »04



## வயலுக்கு தீ வைத்தால் இழப்பீடு எதுவுமில்லை

கொழும்பு, ஓக. 15
வறட்சி காரணமாக அழிவடைந்த நெற்பயிர்களுக்கு தீ வைத்தால், நட்டஈடு எதுவும் வழங்கப்பட மாட்டாது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-ஒ,இ)

வான்படையின் குண்டுவீச்சால் கொன்றொழிக்கப்பட்ட

## செஞ்சோலை மாணவிகளுக்கு தாயகத்தில் பரவலாக அஞ்சலி

யாழ்ப்பாணம், ஓக. 15
சிறிலங்கா வான்படையின் போர் விமானங்கள் வீசிய குண்டுவீச்சால் முல்லைத்தீவு செஞ்சோலையில் உயிரிழந்த 54 மாணவிகள் மற்றும் 7 பணியாளர்களின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல் தமிழர் தாயகத்தின் பல்வேறு »11

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ. 120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
அதிகபட்ச இரகசியத்தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தாயகப் பகுதியில் மரபுரிமை ஆக்கிரமிப்புகள்

## எதிர்கொள்ளப் பொறிமுறை தேவை அகத்தியர் அடிகளார் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 15

**தமிழர் தாயகத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் மிக வேகமாக மரபுரிமை ஆக்கிரமிப்புகள் நடைபெற்று வருகின்றன. இதனை எதிர்கொள்ளச் சரியான பொறிமுறை ஒன்றை அனைத்துத் தமிழ்த் தரப்புகளும் இணைந்து மேற்கொள்வது அவசியமானது என்று வலியுறுத்தியுள்ளார் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் அமைப்பாளர் தவத்திரு அகத்தியர் அடிகளார்.**

இதுதொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

தமிழர் தாயகத்தில் மரபுரிமை ஆக்கிரமிப்பை எதிர்கொள்வதற்காக உருவாக்கப்படும் பொறிமுறையில் பல்கலைக்கழகச் சமூகத்தினது பங்களிப்பு புலமைசார் தளத்தில் அத்தியாவசியமானது.

அதேபோன்று சட்டரீதியாகப் பிரச்சினைகளை எதிர்கொள்ளச் சட்டவாளர்களின் பங்களிப்பு இப்போது போன்று தொடர்ந்து கிடைப்பதுடன் அது அனைத்து பிராந்திய மட்டத்திலும் ஒருங்கிணைந்த நிபுணத்துவத்துடன் இருப்பது மேலும் பலம் சேர்க்கும்.

தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர்கல்வி மாணவர்கள் மேலும் முழுவீச்சுடன் போராட்டங்களை மக்கள் சார்ந்தாக ஒழுங்கமைக்க வேண்டும்.

அரசியலாளர்கள் தொடர் அழுத்தத்தை அரசுக்கு வழங்குவதுடன் நாடாளுமன்றத்தைப் புறக்கணித்தல் உட்பட ஒத்துழையாமை இயக்கத்துக்குத் தயாராக வேண்டும்.

அமைப்புசார் நிலையில் இயங்கும் நாம் அனைவரும் எம் அமைப்புகளின் தனித்துவங்களைப் பேணும் அதேநேரம், எம் மக்களின் ஒட்டுமொத்த நலனுக்காக இருப்பை இந்தத் தீவில் நிலைநிறுத்துவதற்காக ஒருங்கிணைந்த கட்டமைப்பாகச் செயற்பட இந்தத் தீர்க்கமான தருணத்தில் அழைப்பு விடுகின்றோம். அதே நேரம் இந்தப் பிரச்சினையை இதயசுத்தியோடு அணுகி அரசு தீர்க்கத் தவறின் இந்தத் தீவில் இனங்களுக்கு இடையே சமாதான சகவாழ்வு தொடர்ந்து கேள்விக்குறியாகி நாட்டின் எதிர்காலம் அதலபாதாளத்துக்குள் செல்லும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்

தமிழர்களின் தலைகளை களனிக்குக் கொண்டு வருவேன் எனப் பகிரங்கமாகக் கூறும் அளவுக்கு வந்துள்ள அரசியலாளர்களைக் கைது செய்யவும், தமிழரின் வழிபாட்டுத் தலங்கள் தொடர்பாக மிக மோசமான கருத்துகளை வெளியிடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் அரசு உடனடியாக முன்வர வேண்டும் - என்றார். (ம-66)

# போதைப் பாவனை தீவிரம்

நாட்டில் போதைப்பொருள் பாவனை தீவிரமாகி வருகின்றது. போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பல பிரதேசங்களில் சட்டம் - ஒழுங்கைப் பேணுவது தடையாக உள்ளது என்று மேல் மாகாணத்துக்குப்பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'போதைப்பொருள் தொடர்பில் எமக்குக் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் நாளாந்தம் சோதனைகளை நடத்தி அவற்றை விற்பனை செய்வோரையும், விநியோகம் செய்பவர்களையும் பொலிஸார் கைது செய்கின்றனர். பொதுமக்களின் ஆதரவுடன் எதிர்காலத்தில் அந்த நடவடிக்கைகளை தீவிரப்படுத்த நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளவர்களே சமூகத்தில் நடக்கின்ற மோசமான சம்பவங்களுக்குக் காரணமாக இருக்கின்றனர். திருட்டுகள், வழிப்பறிகள், கொள்ளைகள், கார் திருட்டுகள் மற்றும் வீட்டில் நடக்கும் குடும்ப வன்முறைகள் கூட போதைப் பழக்கத்தினால் ஏற்படுகின்றன - என்றார். (ம)

# வங்கிகளின் வட்டி வீதங்கள் ஒற்றை இலக்கத்துக்கு வரும்

## சாகல ரத்நாயக்க நம்பிக்கை

கொழும்பு, ஓக. 15

இந்த ஆண்டின் இறுதிக்குள் வங்கி வட்டி வீதங்களை ஒற்றை இலக்கத்துக்குக் கொண்டுவர முடியும் என்று ஜனாதிபதியின் பணிக்குழாம் மட்டப் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது பொருளாதார நெருக்கடியின்போது வங்கி வட்டி வீதங்கள் 34 சதவீதமாக இருந்தன. ஆனால் அவை தற்போது 16 முதல் 17 சதவீதமாக உள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டின் இறுதிக்குள் வங்கி வட்டி வீதங்களை ஒற்றை இலக்கத்துக்குக் கொண்டுவர முடியும். சிறு, நடுத்தர உரிமையாளர்கள் மீண்டும் வலுப்பெறுவார்கள் என்றார். (எ-இ)

# கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டுமாம் அரசு

## கலைஞர்களின் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஓக. 15

சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்காக அரசாங்கம் கடுமையான முடிவுகளை எடுக்கவேண்டும் என தொழில்முறை சமையல் கலைஞர்களின் சங்கம் கோரியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போது அந்தச் சங்கத்தின் தலைவர், சுனில் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறை தற்போது வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கிறது. இதற்குச் சம்பந்தப்பட்ட அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்காக அரசாங்கம் கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டும். என்றார். (எ-இ)

# ஐ.தே.க.வின் செயற்குழு ஓகஸ்ட் 17

கொழும்பு, ஓக. 15

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு எதிர்வரும் 17ஆம் திகதி கூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கட்சியின் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் கட்சியின் 77ஆவது சம்மேளனத்தை நடத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடவே செயற்குழு கூடுவதாகவும் செயலாளர் குறிப்பிட்டார். (ம)

**கடும் வறட்சி எதிரொலி**



# தேசியப் பூங்காக்களுக்கு பவுஸர்கள் மூலம் தண்ணீர்

கொழும்பு, ஓக. 15

தற்போது நிலவும் கடும் வரட்சியான காலநிலை காரணமாக யால தேசிய பூங்காவும் பாதிக்கப்பட்டுள்ளதால் வனவிலங்குகளின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக பவுஸர்கள் மூலம் தண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டு சிறிய குளங்களுக்குள் பாய்ச்சப்பட்டு வருவதாக துறைசார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யால தேசிய பூங்கா ஊடாக பாயும் மாணிக்க கங்கையில் இருந்து நீர் எடுக்கப்பட்டு பவுஸர்கள் மூலம் பூங்காவுக்குள் கொண்டுச் செல்லப்பட்டு வன விலங்குகள் தண்ணீர் அருந்தும் இடங்களில் விடப்படுகிறது.

மழைக்காலம் ஆரம்பமாகும் வரையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (ம)

# 20,000 கஞ்சாச்செடிகள் பயிரிட்ட மூவர் கைது!

கொழும்பு, ஓக. 15

புத்தளம் தனமல்வில பகுதியில் கஞ்சாவைப் பயிரிட்ட குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவல்களுக்கு அமையவே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயிரிட்டதாகக் குறிப்பிடப்படும் 20 ஆயிரத்து 674 கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-ரி2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பு வழிமுறைகளில் ஈழம் அமைப்பதற்கு முயற்சி

## குற்றஞ்சாட்டுகின்றார் ஜகத் டயஸ்

**கொழும்பு, ஓக. 15**

**அரசமைப்பு ஊடாக ஈழத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இடம் பெறுகின்றனவா? 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது வடக்கு, கிழக்கில் தனிநாடு உருவாவதற்கு வழிவகுக்கும் என்பதை உணர்ந்திருக்கின்றீர்களா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் இராணுவப் பிரதானி லெப். ஜெனரல் ஜகத் டயஸ்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விக்கிரமசிங்க, ராஜபக்ச அரசின் நடவடிக்கைகள் நாடு பிளவுபடுவதற்கு வழிவகுக்கும். அதனால் அவசரமாக எதிர்க்க வேண்டிய தேவை உள்ளது என்பதை உணர்கின்றேன். தங்கள் உயிர்களைப் பணயம் வைத்து விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்காக 2009 ஆம் ஆண்டு போரிட்டவர்கள், பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலை ஊக்குவிக்கும் தற்போதைய நிகழ்ச்சி நிரலை எதிர்க்கின்றனர். தேசியப் பாதுகாப்பைப் புறக்கணித்துவிட்டு சில இராணுவத் தளங்களை மூடுவது, தொல்பொருளுடன் தொடர்புள்ள இடங்களைக் கைவிடுவது, பொதுச்சொத்துக்களை தனியார் மயப்படுத்துவது இராணுவத்தை பலவீனப்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் நாட்டைப்பிளவுபடுத்தும்சூழலை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டவையா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

இந்திய - இலங்கை உடன்படிக்கையின் தனக்குள்ள கடப்பாட்டை இந்தியா நிறைவேற்ற தவறிவிட்டதால் இலங்கை மீது திணிக்கப்பட்ட 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை நியாயப்படுத்த முடியாது. இந்திய - இலங்கை உடன்படிக்கையின்படி விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைக் களையமுடியவில்லை. அதனால் இலங்கை இந்த உடன்படிக்கையை மதிக்கவேண்டியதில்லை - என்றார். (எ-இ)

## இந்தியாவின் நன்கொடையில் டிஜிற்றல் அடையாள அட்டை

### ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஓக. 15



இந்தியாவின் நன்கொடையின் கீழ் இலத்திரனியல் அடையாள அட்டையைத் தயாரிக்கும் திட்டத்தில் இலங்கை கைச்சாத்திடவுள்ளது. ஒக்ரோபர் மாதம் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகும் என்று தேசியப் பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வேலைத்திட்டத்துக்காக உலகில் உள்ள தகவல் தொழில்நுட்பத்தின் பிரதான நிறுவனங்கள் பல எமது நாட்டுக்கு அது தொடர்பான அறிவை இலவசமாக வழங்கியுள்ளன. அதில் பில்கேட்ஸ் நிறுவனத்தின் நிறுவனமான பில் மற்றும் மிலிண்டா கேட்ஸ் மன்றங்களும் உள்ளடங்குகின்றன. இந்தியா தற்போது டிஜிற்றல் அடையா அட்டை ஒன்றை அந்த நாட்டில் அறிமுகப்படுத்தியுள்ளதுடன் அதன் மாதிரிப் படிவத்துக்கமையவே எமது நாட்டு மக்களுக்கும் டிஜிற்றல் அடையாள அட்டை ஒன்றை விநியோகிக்க இருக்கிறது.

இந்தத் திட்டத்தின்படி, ஒரு நபரின் இரத்த வகை முதலிய தகவல்கள் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் அவருக்கான தனி இணையத்தளக் கணக்கில் சேமிக்கப்படும். குறித்த நபரின் அனுமதியுடன் வங்கிப் பரிவர்த்தனைகள் அல்லது பிற நிறுவனத்தேவைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்தத் தகவல்களை அனுப்பும் வசதியும் இந்தப் புதிய அடையாள அட்டையுடன் ஏற்படுத்தப்பட்டிருக்கும் - என்றார். (ம-ரி2)

## தேர்தலை நடத்தியபின்னர் '13'ஐ கொண்டு வாருங்கள்

கொழும்பு, ஓக. 15

'13'ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்தவேண்டும் என பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

'13' ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் பொதுமக்களின் ஆணையைப் பெறவேண்டும். ஜனாதிபதித் தேர்தலை அறிவித்துவிட்டு 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரத்தை மக்களிடம் கோருங்கள்.

மக்கள் அதற்கான அதிகாரத்தை வழங்கத் தயார் என்றால் மாத்திரமே அதை நடைமுறைப்படுத்துவதற்கான உரிமை கிடைக்கும். ஜனாதிபதிக்கு தற்போது அதற்கான ஆணையில்லை. தற்போதைய அரசாங்கத்துக்கும் இதற்கான ஆணையில்லை. அவர்கள் தேர்தல் மூலம் இந்தப் பதவிகளைப் பெறவில்லை. முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவான சிலர் மூலமே அவர்கள் இந்த ஆதரவைப் பெற்றனர் - என்றார். (எ-இ)

## கோதுமை மாவின் விலை உயரலாம்!

கொழும்பு, ஓக. 15



இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவின் கையிருப்பு வீழ்ச்சியடைந்துள்ளது என்று புறக்கோட்டை கோதுமை மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிறீமா மற்றும் செரண்டிப் தவிர அனைத்து இறக்குமதியாளர்களுக்கும் கோதுமை இறக்குமதிக்கு கடந்த ஜுலை மாதம் 16 ஆம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

புறக்கோட்டை மொத்த விற்பனையாளர்களிடம் கையிருப்பில் இருந்த கோதுமை மா தற்போது தீரும் நிலைக்கு வந்துள்ளதால் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்று புறக்கோட்டை கோதுமைமா இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தநிலைமை காரணமாக எதிர்வரும் நாள்களில் கோதுமை மாவின் விலை அதிகரிக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)




**ஊ**ருக்குள்ள வந்த பேய் தானாவே போக வெளிக்கிட்டால், ஆரும் கெஞ்சிக் கூத்தாடி போக வேண்டாமெண்டு மறிப்பினமோ? இல்லாட்டிக் கலைப்பினமோ? கலிகாலத்தில அப்பிடிப் போக வெளிக்கிடுற பேயை 'ஐயோ எங்களை விட்டிட்டுப் போக வேண்டாம்' எண்டு ஆர்ப்பாட்டம் செய்யிற நிலமையும் வந்திட்டுது. அப்பிடி கலிமுத்திப்போய் ஆமிக்காரரை ஊரைவிட்டுப் போகவேண்டாமெண்டு கற்கோவளத்தில நேற்று ஆர்ப்பாட்டம் ஒண்டு நடந்திருக்கு. என்னதுக்காக உந்த ஆமியைப் போகவேண்டாமெண்டுறியள் எண்டு அவையைக் கேட் டால், 'இஞ்ச ஒரே கள்ளர் பயம். இரவில பெண்புரசு களும் புருசன்மாரோட கடற்கரைக்குப் போட்டு வலை போட்டிட்டு வாறவை. ஆமி போனால் அப்பிடியெல்லாம் இனி வரமுடியாது. வழியில ஆரும் ஏதும் செய்திடுவாங்களோ எண்டு பயமா யிருக்கும். அதோட இந்தப் பக்கத்தால இவ்வளவு நாளும் கள்ள மண் ஏத்துறவை ஆமியின்ர பயத்தில அவ்வளவா வாறேலை. ஆமி 'காம்பை' எடுத்தால் எல்லாரும் வந்து இஞ்சத்தை மண்ணை அள்ளிக்கொண்டு போகப்போறாங்கள். அதைவிட மாரி காலத்தில வெள்ளம், தண்ணி வந்தால் ஆமிக்காரர் தான் ஓடிவந்து உதவி செய்வாங்கள்' எண்டெல்லாம் ஒவ்வொரு காரணமாச் சொல்லி ஒப்பாரி வைக்கினம். அப்ப ஆமியில்லாக் காலத்தில எல்லாரும் என்ன செய்தவை?

இதில கனக்க பொலிஸ்காரர் செய்யவேண்டிய சிவில் விசயங்கள், அதையெல்லாம் இவ்வளவு நாளும் ஆமிக்காரர் கையில எடுத்து வைச்சிருக்கினம். அதோட அங்கத்தைச் சனத்தின்ர மனதில பொலிஸை விடவும் ஆமிதான் நல்லது எண்ட எண்ணப்பாடும் இருக்குது. அதாலதான் இப்பிடிப் போராட்டம் எண்டு ஒரு தரப்புச் சொல்லுது. ஆனால் இப்ப றோட்டில ஒருத்தன் அடிபட்டுக் கிடந்தாலே எட்டியும் பாக்காத எங்கட சனங்கள், எங்களை அழிக்க வந்த ஆமிக்காரர் முகாமை எடுத்துக் கொண்டு போகப்போறாங்கள் எண்டவுடன கையில 'பிரிசில்போர்ட்டோட' வந்து நிண்டு ஆர்ப்பாட்டம் பண்ணுகினம் எண்டால், அதுக்குப் பின்னால ஏதோ ஒரு தூண்டல் இருக்கத்தானே செய்யும். அங்கத்தை ஆமிக்கொமாண்டர் நல்லாத் தமிழ் கதைப்பாராம். அதால ஆள் சனத்தோட நல்ல வாரப்பாடு. சிரிச்சுச் சிரிச்சுக் கதைச்சே தனக்குத் தேவையான விசயங்களைக் கறந்துபோடுவாராம். இது அங்கத்தைச் சனத்துக்கு விளங்கிறேலை. இப்ப அந்த ஆமிக்கொமாண்டர்தான் இப்பிடி அந்த முகாமை எடுக்கச் சொல்லி மேலிடத்தில இருந்து ஓர்டர் வந்திருக்கெண்டும், சனங்கள் ஆர்ப்பாட்டம் செய்தால் அதை மேலிடத்துக்கு அனுப்பி முகாமை எடுக்கவிடாமல் ஏதும் செய்யலாம் எண்டும் அங்கத்தை ஆக்களுக்குச் சொல்லியிருக்கிறார். அதோட ஆர்ப்பாட்டத்துக்குத் தேவையான பிரிசில்போர்ட், மார்க்கர் எல்லாம் ஆமிக் கொமாண்டார்தான் குடுத்தவராம். அதோட முன்னுக்கு நிண்டு ஆக்களைக் கூட்டியந்தவைக்கு 'தண்ணிக்கவனிப்பும்' நடந்ததாம்.

சனமான சனமெல்லாம் ஆமி போ போ எண்டு அலறுது. இதுகள் என்னெண்டால் 'நில் நில்' எண்டு அலையுதுகள். என்னதுக்காக இப்பிடி ஆமியிட்ட கெஞ்சுகினமெண்டதுதான் முழுசா விளங்கேலை. என்னவோ போடா பரமா!



– பட்சி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறப்புற...

நேற்றுத் திங்கட்கிழமை பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் வெகு சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் நடைபெற்றது.

நேற்றுக் காலை 6.45 மணியளவில் வசந்தமண்டபப் பூசை இடம்பெற்றதைத் தொடர்ந்து சண்முகப் பெருமானும், விநாயகப்பெருமானும் திருநடனத்துடன் ஆலய உள்வீதியில் எழுந்தருளிக் காலை 9.30 மணியளவில் சித்திரத் தேர்களில் எழுந்தருளினர்.

அதனைத் தொடர்ந்து மு.ப. 10.30 மணியளவில் அடியவர்களின் 'அரோகரா' கோஷம் முழங்கச் சித்திரத் தேர்களின் பவனி ஆரம்பமானது. சண்முகப் பெருமான் 45 அடி உயரம் கொண்ட சித்திரத் தேரில் வீதி உலா வந்ததுடன் இரண்டு



தேர்களையும் ஆண் அடியவர்களும், பெண் அடியவர்களும் இணைந்து வடம் தொட்டிழுத்தனர்.

சித்திரத் தேர்களின் வீதி உலா இடம் பெற்றபோது கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் அடியவர்கள் பலரும் காவடிகள், அங்கப் பிரதட்சணம், கற்பூரச் சட்டிகள் எடுத்து நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (அ-ஒ.66)

# நெடுந்தீவில் குதிரைகளுக்கு குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 15

நெடுந்தீவில் குதிரைகள் நீரின்றி அலையும் தகவல் சமூக ஊடகங்களில் பரவியதையடுத்து, அங்குள்ள தொட்டிகளில் நீர் நிரப்பும் நடவடிக்கை உடனடியாகவே நேற்று இரவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குதிரைகளுக்குத் தேவையான நீரை கடந்த சில நாள்களாக வழங்காததால், குதிரைகள் நீர் அருந்தும் தொட்டிகள் காய்ந்து போயிருந்தன. இதனால் குதிரைகள் நீர் தேடி அலைந்து கொண்டிருந்தன. அந்தப் பகுதிக்கு வேறு தேவைகளுக்காகச் செல்பவர்களின் வாகனங்களையும், குடிதண்ணீர் நிரப்பும் வாகனங்களென நினைத்து குதிரைகள் ஓடி வந்து, ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாக சமூக வலைத்தளங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த விவகாரம் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், யாழ். மாவட்டச் செயலரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதையடுத்து, நேற்று இரவே அங்குள்ள தொட்டிகளில் நீர் நிரப்பப்பட்டுள்ளது. (ஒ-இ)

# குடிதண்ணீருக்காகச் சென்றவர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

கிளிநொச்சி, ஓக. 15

குடிதண்ணீரைப் பெறுவதற்கு வீதியில் சென்ற மூதாட்டியை மோட்டார் சைக்கிள் மோதியதில் உயிரிழந்துள்ளார்.

பெரியகுளம், பழைய வட்டக்கச்சியைச் சேர்ந்த ஆறுமுகம் சுப்பம்மா (வயது - 82) என்பவரே நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.


கடந்த 12ஆம் திகதி குடிதண்ணீர் எடுப்பதற்காக வீதியில் சென்றபோது மோட்டார் சைக்கிள் அவரை மோதித்தள்ளியுள்ளது. படுகாயமடைந்த நிலையில் தர்மபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ-ஒ.113)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்லத்துரை கார்த்திகேசு

திதி: 15.08.2023



குடும்பத்தின் குலவிளக்காய்
எம் வாழ்வை சுபீட்சமாக்கி
விதி வரைந்த வழிதனில்
எம்மை விட்டு பிரிந்து
ஆண்டுகள் ஐந்தானாலும்
ஆற்ற முடியவில்லை
உங்கள் நினைவுகளை

8 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு,
யாழ்ப்பாணம்.

துயர்பகிரும் குடும்பத்தினர்

மண்ணில் 01.08.1940 — விண்ணில் 10.08.2018

## மரண அறிவித்தல்

தோற்றம் 15.06.1937 — **வயித்திலிங்கம் சகுந்தலாதேவி** — மறைவு 14.08.2023



சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் சகுந்தலாதேவி அவர்கள் நேற்று (14.08.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - நாகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை வயித்திலிங்கம் (அன்பர்) அவர்களின் அன்பு மனைவியும், வசந்தகுமார் (சுவிஸ்), ராஜ்குமார் (சுவிஸ்), சந்திரகுமாரி (சில்லாலை), வசந்தகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சபாநாயகி (சுவிஸ்), கௌசல்யா (சுவிஸ்), செல்வரட்ணம் (சில்லாலை), சற்குணசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற ஆனந்தம் மற்றும் செல்வராணி, காலஞ்சென்ற வடிவேலாயுதம் மற்றும் மனோன்மணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சுந்தரம், மற்றும் நல்லையா, பத்மாவதி, கணேசன் ஆகியோரின் மைத்துனியும், வைஷ்ணவி (சுவிஸ்), அபிராம் (சுவிஸ்), ரதுள் - றஜிந்தா (சுவிஸ்), வைத்தீசன் (சுவிஸ்), சக்திவேல் (Cargills Food City, Jaffna)- நிரோஜா (கால்நடை வைத்திய அலுவலகம், சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்), சரண்ராஜ் (நில அளவையாளர்)- நிருத்திகா (ஆசிரியை, கிளி/உருத்திரபுரம் ம.வி), சரண்ணியா - கீர்த்தீபன் (பிரான்ஸ்), சஞ்சீவ் (ஜேர்மனி), சங்கீத் (ஜேர்மனி), அபிஷேக் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், வருண்காந், மிதுன், நவிரா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சம்பில்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
செ.சக்திவேல் 077 422 [illegible]

தகவல்: குடும்பத்தினர்
(சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புத்தரே சொல்லினும்...

'நான் வடக்கு – கிழக்குக்கு வருவேன். தமிழர்கள் எவராவது விகாரைகளைக் கட்டுவதைத் தடுக்க முற்பட்டால், மகாசங்கத்தினர் மீது கைவைத்தால் களனிக்கு தமிழர்களின் தலைகளுடன்தான் திரும்புவேன்' என்றவாறாகப் பகிரங்கமாக எச்சரித்திருக்கின்றார் முன்னாள் அமைச்சரான மேர்வின் சில்வா. கோத்தாபய அரசாங்கத்துக்கு எதிரான 'அரகலய' போராட்டக் காலத்தில் மௌனித்திருந்த பௌத்த பேரினவாதம், கடந்த சில மாதங்களாக அதிதீவிரமாக தலைதூக்க எத்தனித்திருக்கின்றது. ஆற்று வெள்ளத்துக்கு இடப்படும் தடைகள், எவ்வாறு அந்த ஆற்றின் நீரோட்டத்தை அதிகரிக்கவும் ஒரு காரணமாக அமையுமோ, அவ்வாறுதான் 'அரகலய' காலத்துக்குப் பின்னரான பௌத்த பேரினவாத நிகழ்ச்சிநிரல்கள் அமைந்திருக்கின்றன.

கம்மன்பில, வீரவன்ஸ, வீரசேகர உள்ளிட்ட பலரும் இந்த 'பௌத்த பேரினவாத' திணிப்பை ஆக்கிரமிப்பு மனோநிலையை வெறுப்புணர்வு அரசியலை தம் முழுநேரத் தொழிலாகவும் – அரசியலாகவும் முன்னெடுத்துவரும் நிலையில், மேர்வின் சில்வாவும் தன் பங்குக்கு சாரத்தை மடித்துக் கட்டிக்கொண்டு 'பழைய பன்னீர்ச்செல்வமாக' களத்தில் இறங்கியிருக்கிறார். நாட்டில் தொடர்ந்து தேர்தல் திருவிழா களை கட்டப் போகின்றது. மாகாணசபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் என்று அடுத்தடுத்து பல தேர்தல்கள் வரவிருக்கின்றன. இவ்வாறான நிலையில், இலங்கையில் தேர்தலின் இலவச இணைப்பான பௌத்த பேரினவாத பரப்புரைகளும் வெறுப்புணர்வுகளும் இனிவரும் நாள்களில் இன்னுமின்னும் தீவிரமாக முன்னெடுக்கப்படும்.

13 ஆவது திருத்தம் எப்போதெல்லாம் பேசுபொருளாகின்றதோ, அப்போதெல்லாம் ஏதோ 13 ஆவது திருத்தம் மூலம் தமிழீழத்தையே கொடுத்துவிடுவதைப் போன்று, 'தமிழர்கள் தனிநாடு கோருவதன் அவசியம் என்ன?' என்று திரும்பத்திரும்ப விஷமத்தனக் கேள்விகளையும், இழிநிலை அரசியலையும் முன்னெடுக்கும் பௌத்த பேரினவாதப் பேர்வழிகளுக்கு, தமிழர்கள் தம்மைத்தாமே ஆள்கின்ற உரிமையை – உரித்தை எதற்காகக் கோருகின்றனர் என்பதற்கான பதிலைத்தான் மேர்வினின் கருத்து மெய்ப்பித்து நிற்கின்றது. எனினும், அவருடைய கருத்துகள் மட்டில் தமிழர்கள் அச்சப்படவோ – தயங்கவோ – கிலிகொள்ளவோ போவதில்லை. ஏனெனில், இலங்கையின் பௌத்த பேரினவாத கடைநிலை வரலாற்றில் மேர்வின் முதலாமவரும் அல்லர் புதியவரும் அல்லர் கடைசியானவரும் அல்லர்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, தென்னாபிரிக்காவைப் பின்பற்றிய 'நீதிப்பொறிமுறை' முன்வைக்கப்படும். உண்மையைக் கண்டறியும் அந்த ஆணைக்குழுவின் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்று பகற்கனவு கண்டுகொண்டு, சர்வதேசத்துக்குப் பித்தலாட்டம் காட்டிக்கொண்டிருக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வகையறாக்கள், ஒரு விடயத்தை உச்சப்புரிதலுடன் அணுக வேண்டும். தென்னாபிரிக்கா தன் நாட்டில் இடப்பெற்ற கறுப்பினப் படுகொலைகளுக்கு எதிரான நீதியாக, இனப்படுகொலையாளர்களை தண்டிப்பதற்கு முன்னர் 'மீண்டும் நிகழாமை' என்பதைத்தான் உறுதிப்படுத்தியது. இனி இந்த நாட்டில் இவ்வாறு நடக்காது என்ற நம்பிக்கையைத்தான் தென்னாபிரிக்கா முதலில் கொடுத்தது. அதன் பின்னர்தான் போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். 'தமிழர்களின் தலைகளைத் துண்டிப்பேன்' என்ற மேர்வினின் கருத்துக்கும், 'மீண்டும் நிகழாமை' என்ற நீதிப்பொறிமுறைக்கும் ஏதேனும் குறைந்தபட்சத் தொடர்பேனும் உள்ளதா? என்று சிங்களத் தலைமைகள் இதயசுத்தியுடன் சிந்தித்துப் பார்த்து விடயத்தை அணுக வேண்டும்.

**'நாய்வால் நிமிராது' என்பது தமிழர்களின் கருத்தாடல்களில் நீண்டகாலமாக வழக்கில் உள்ள ஓர் மொழி. உண்மைதான், புத்தரே சொல்லினும் அது வளைந்தே தான் இருக்கும்...**

**நாளொரு நல்வார்த்தை**

**வாய்ப்புகள் என்பவை சூரியோதயம் போன்றவை, நீங்கள் நீண்ட நேரம் காத்திருந்தால் அவற்றை இழக்க நேரிடும்**

**- வில்லியம் ஆர்தர் வோர்ட் -**






# மலையக மக்களுக்கு அமெரிக்கா ஆதரவு!

## ஜூலி சங் அறிக்கை

**கொழும்பு, ஓக. 15**

**இலங்கையில், அனைத்து இன மக்களுடனும் உரிமைகளைப் பெற்று கௌரவமாக வாழ்வதற்கான மலையக மக்களின் போராட்டத்தை ஆதரிப்பதாக அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.**

மலையக மக்கள் இலங்கைக்கு வருகைதந்து 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபவனியும், போராட்டங்களும், கவனக் கூட்டங்களும் நடத்தப்பட்டு வரும் நிலையில், இது தொடர்பில் வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவிலேயே ஜூலி சங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த இரு வாரங்களாக இடம்பெற்று முடிந்த தலைமன்னார் முதல் மாத்தளை வரையான நடைபவனியானது 200 வருடங்களுக்கு முன்னர் மலையகத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக வருகை தந்தவர்களை நினைவுகூருவதாக உள்ளது என்பதை நான் நினைத்துப் பார்க்கின்றேன்.

இலங்கையின் ஏனைய சமூகத்தினருடன் தாங்களும் சரிசமமாக வாழ்வதற்கான போராட்டத்தை நினைவுகூரும் விதத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் பேரணியையும், அதில் கலந்துகொண்டவர்களையும் நான் நினைவில் நிறுத்துகின்றேன் - என்றுள்ளது. (ம)



# நாட்டில் எலிக்காய்ச்சல்

கொழும்பு, ஓக. 15

தற்போது நிலவும் வறட்சியான காலநிலைக்கு மத்தியில் 'எலிக்காய்ச்சல்' எனப்படும் லெப்டோஸ்பிரோசிஸ் நோயின் பரவல் அதிகரித்துள்ளது என்று இலங்கை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் நபர்கள், குறிப்பாக மீனவர்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டுமென சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். (ம)

# இலங்கையில் விண்கல் மழை

கொழும்பு, ஓக. 15

இலங்கையில் சில நாள்களுக்கு கண்கவர் விண்கல் மழையைக் காணமுடியும் என வானிலையாளர் கிஹான் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

12ஆம் திகதிமுதல் அடுத்தசில நாள்களுக்கு அதிகாலை வேளையில் இந்த விண்கல் மழையைக் காணமுடியும். இது பெர்சீட்ஸ் விண்கல் மழை என அழைக்கப்படுகிறது. இதை, அதிகாலை ஒரு மணி முதல் காணமுடியும் - என்றார். (ம)

**நாளை**

**16.08.2023**

புதன்கிழமை

ஆடி 31

சுபநேரம் : 04.35-06.05

ராகுகாலம் : 12.05 - 01.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
19 • 06 • 1951



மறைவு
13 • 08 • 2023

## திருமதி பிறேமாவதி ராசேந்திரா

யாழ். கோண்டாவில் வடக்கு சிவன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிறேமாவதி ராசேந்திரா அவர்கள் கடந்த (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம், சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா, நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ராசேந்திரா அவர்களின் அருமை மனைவியும், நந்தபாலன்(லண்டன்), நடேசபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கெங்காதேவி, நிலாமதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், தீபக், சோபிதா, பிறேம்நாத், தர்ஷிகா, செந்தூரன், மிதுனன், திலக்ஷன், சிந்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற சான்வி, சிஜென்னா, யூவன் மற்றும் செய்டன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (16.08.2023) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் ந.ப 12:00 மணியளவில் நடைபெற்று, கோண்டாவில் வாழ் மக்கள் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

பொ. நந்தபாலன் - சகோதரன்
Mobile: +447488228088

பொ. நடேசபாலன் - சகோதரன்
Mobile: +94770742137

பொ. நந்தபாலன் - சகோதரன்
Mobile : +94770733538

பொ. நடேசபாலன் - சகோதரன்
Mobile: +33665736924

(CS 25950) A-1

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
15 • 03 • 1944



மறைவு
17 • 07 • 2023

கடந்த (17.07.2023) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் சிதம்பரப்பிள்ளை சின்னத்துரை

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (16.08.2023) புதன்கிழமை அன்னாரின் உசன் கந்தசாமி கோயிலடி மிருசுவில் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடிவந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், அஞ்சலி, ஆறுதல் தெரிவித்த மற்றும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வ தோடு **வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்**

**குடும்பத்தினர்**

**உசன் கந்தசாமி கோயில்
மிருசுவில்.**

**மகன் - கிருபா - 077 819 9861**
**மகள் - நிறஞ்சலா - 074 058 7184**


(cs.51507) (N.1)

# மரண அறிவித்தல்

தோற்றம்
13.09.1955

## செல்லத்துரை ஆறுமுகம்

மறைவு
12.08.2023



எழுதுமட்டுவாள் தெற்கைப் பிறப்பிடமாகவும் கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஆறுமுகம் அவர்கள் கடந்த (12.08.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பேச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும், மனோன்மணி அவர்களின் பாசமிகு கணவரும், நிசாந் (கனடா), நிறோஜாந், நிலான், நிக்ஷன், நிர்முஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், மயூரி, கௌசிகா, பூஜிகா, அனுஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிஜிகா, நிஜிகன் ஆகியோரின் பேரனும், அமரர் நடராசா, செல்வராசா, ராஜேஸ்வரி, பாலகிருஷ்ணன், அமரர் லக்ஷிமி, ராஜேந்திரி, பவானிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**சண்முகானந்தா வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி.**

**நிஷாந் - 077 6987 013**
**நிலான் - 077 1387 005**
**நிக்ஷன் - 076 973 4546**

(CS 25949) 1-6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





## வடக்கில் இன்று இலேசான மழை

கொழும்பு, ஓக. 15

வடக்கு மாகாணத்தின் சில இடங்களில் இன்று இலேசான மழை பெய்யும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ், ஓக. 15

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு நாளை புதன் கிழமை காலை9 மணிக்கு பாடசாலையின் சிவயோகசுவாமிகள் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க. தவகீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன் பிரதம விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார். (ச-இ)


# INVITATION FOR BID
## Work Project-2023
## Manthai East PradeshiyaSabha –Pandiyankulam

1. The Chairman, Local Authority Procurement Committee on behalf of Manthai East Pradeshiya Sabha, Northern Province invites sealed bids from eligible and qualified Bidders for the works described in the table below.
2. Bidding will be conducted through National competitive bidding procedure. However, according to the public finance circular no 04/2016(ii) dated 2019.05.08 regional preference and CIDA grade preference shall apply.
3. To be eligible for contract award the successful bidders shall not have been black listed and shall have been registered in the field of Road and Building for grade mentioned in the table below with the Institute for Construction Industry Development Authority (CIDA).
4. Qualification requirements are indicated in section 4 of the bidding document. Additional details are provided in the Section 5 of the bidding document.
5. Interested bidders may obtain further information from Chairman, Procurement committeeManthai East Pradeshiyasabha.-Pandiyankulam (Te.No-021 228 3475, Fax No-021 228 3476) and inspect the bidding documents at the address given below from any working days 9.00 hrs to 14.00 hrs from 2023.08.15 till 2023.08.29
6. A complete set of Bid Documents in English language may be purchased by interested Bidders on the submission of a written application to the Manthai East Pradeshiyasabha. From 2023.08.15 until 2023.08.29 from 09.00 hrs to 14.00 hrs. Upon payment of a non-refundable fee of Rs.2,000.00. The method of payment will be by cash.
7. Bids shall be delivered of Original and duplicate to the address Chairman,Manthai East Pradeshiyasabha on or before 14.30 hrs on 2023.08.29 Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend.

| S. N | Contract No | Description of Work | Source of Fund | Estimated Civil Cost (Million) | Contract Period | Required Grade | Required Bid Security | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Bid Validity Days | Bid Validity Period | Security amount | Security Validity Period |
| 01 | NP/14/44/(02)/02/CF/2023/04 | Reconstruction of the 30 Housing Scheme Road at Palinagar | Council | 0.845 | 02 Months | C9/C8 | 49 Days | 2023.10.17 | 10000.00 | 2023.11.14 |
| 02 | NP/14/44/(02)/02/CF/2023/05 | Reconstruction of the 3rd Lane at Selvapuram | Council | 0.845 | 02 Months | C9/C8 | 49 Days | 2023.10.17 | 10000.00 | 2023.11.14 |
| 03 | NP/14/44/(02)/02/CF/2023/06 | Construction of the Rubble Box Culvert on Ampalpuram School Road | Council | 0.825 | 02 Months | C9/C8 | 49 Days | 2023.10.17 | 10000.00 | 2023.11.14 |
| 04 | NP/14/44/(02)/02/CF/2023/07 | Supplying & Fixing of Air Conditioner at Manthai East Pradeshiya sabha office Building | Council | 2.50 | 01 month | - | 49Days | 2023.10.17 | 40000.00 | 2023.11.14 |
| 05 | NP/14/44/(02)/02/PSDG/2023/01 | Construction of Naddankandal 3rd Road | PSDG | 6.27 | 98Days | C8,C7, C6 | 77days | 2023.11.14 | 90000.00 | 2023.12.12 |

Bid security is as following table
**Bid invitation table**


8. Pre bid meeting will be held on 2023.08.22 at 14.30 in Manthai East Pradeshiyasabha ,Pandiyankulam. Interested bidders may attend the pre bid meeting at their own expenses.
9. The procurement committee has the power to reject the bid as totally or partly and to call retender

**Chairman,**
**Local Authority Procurement Committee**
**Manthai East PradeshiyaSabha,Pandiyankulam**
**2023.08.15**

(cr.39908) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீடு



யாழ்ப்பாணம், ஓக. 15

எழுத்தாளர் ஸ்ரீநந்தகுமாரின் 'யோகியர் சிகிச்சை இரகசியம்' எனும் நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ்.பல்கலை இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி முகுந்தன் தலைமையில் யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு.திருமுருகன் கலந்து கொண்டார். இந்த நூலுக்கான ஆய்வுரையை யாழ். பல்கலையின் சித்த மருத்துவ பீடத் தலைவர் கலாநிதி லிவியன் வழங்கினார். இந்த நிகழ்வில் கலைத்துறை சார்ந்தோர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ம-ரி3,27)

# கமலாசனி வித்தியில் திருவள்ளுவர் சிலை!



சாவகச்சேரி, ஓக. 15

மிருசுவில் விடத்தற்பளை

கமலாசனி வித்தியா லயத்தில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் திருவுருவச் சிலை நேற்றையதினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலாநிதி ஆறு. திருமுரு கனும், சிறப்பு விருந்தினர்களாக வித்தியாலய பழைய மாணவரும் திருவள்ளு வரின் திருவுருவச் சிலையை வழங்கியவர்களுமான சோ.ஜெயக்குமார் மற்றும் அவரது பாரியாரும் கலந்துகொண்டனர். (ம-ரி3, 9)


## வீடு விற்பனைக்கு

சோமசுந்தரம் அவெனியூவில்

1·3/4 பரப்பு வீடு

விற்பனைக்குண்டு

தொடர்பு:

077 732 6792

076 3058 474



## வேலையாள்கள் தேவை

சுழிபுரத்தில் அமைந்துள்ள வியாபார நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை.

077 222 1220


(CS 51649) (N.1)



## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 12 . 12 . 1971

மறைவு 14 . 08 . 2023



எமது திணைக்களத்தில் அபிவிருத்தி அலுவலர் (பதில் கடற்றொழில் பரிசோதகர்) ஆக கடமையாற்றும்

**சங்கரப்பிள்ளை சிவகுமார்**

அவர்களின் மறைவுத்துயர் அறிந்து எமது ஆழ்ந்த அனுதாபங்களை குடும்பத்தினருக்கு தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**உதவிப் பணிப்பாளரும் அலுவலர்களும்.**

**மாவட்ட அலுவலகம்**

**கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் - யாழ்ப்பாணம்.**

(CS 25954) A-1



## கேள்வி அறிவித்தல்

**தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமானது தனது எரிபொருள் நிலைய கனப்பி விஸ்தரிப்புக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகளை கோருகின்றது.**

01. கேள்விதாரர்கள் வலிதான பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

02. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள் தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி கொடிகாமம். எனும் முகவரியில் அமைந்துள்ள தலைமைப் பணிமனையுடன் (தொலைபேசி இலக்கம் 0212050321) தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை 16.08.2023 திகதி முதல் 23.08.2023 திகதி வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்வியாளர்கள் கேள்வி ஆவணங்களின் ஆங்கில மொழிமூலமான தொகுதியினை தலைமைப்பணிமனை தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி கொடிகாமம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பித்து 16.08.2023 திகதி முதல் 23.08.2023 வரை காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா ஆயிரம் (1000/=) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

04. கேள்விகள் யாவும் (மூலம், பிரதி) தலைவர், தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி கொடிகாமம் எனும் முகவரியில் 24.08.2023 திகதி காலை 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது சங்கத்தின் பெறுகை பெட்டியினிலோ இடல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் " எரிபொருள் நிலைய கனப்பி விஸ்தரிப்பும் புனரமைப்பும் கேள்வி கோரல்" என தலைப்பிட்டு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். 24.08.2023 ம் திகதி காலை 11.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

05. தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதி தீர்மானம் ஆகும்.

**தலைவர்**
**தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**கொடிகாமம்.**



## பெறுகைக்கான அழைப்பு

**உணவு குடிபானம் மற்றும் சிற்றுண்டிகளை வழங்கல்**

**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**

**NP / 20 / FB / PROC / FOOD / 2023 / 02**

மாகாணக்கல்வித் திணைக்களத்தால் 01.10.2023 - 31.10.2024 வரையான காலப்பகுதிக்கு செயலமர்வுகள் மற்றும் நிகழ்வுகளிற்கு உணவு குடிபானம் மற்றும் சிற்றுண்டிகளை கொள்வனவு செய்வதற்காக திணைக்களப் பெறுகைக்குழு (பெரியது) முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றது.

01. பெறுகைகள் அனைத்தும் தேசிய விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப் படுத்தப்படும்.

02. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணம் : ரூபா 1000.00

03. பெறுகைப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் காலப்பகுதி: **அலுவலக நாட்களில் 15.08.2023 தொடக்கம் 29.08.2023 வரையான காலப்பகுதியில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்**

04. விலைக்கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய திகதியும் இடமும் : 31.08.2023 திகதி 10.00 மணிக்கு முன்பதாக வடமாகாணக் கல்வித் திணைக்கள பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

**பெயர் :- திரு.தி. ஜோண் குயின்ரஸ்**
**பதவி :- தலைவர்/மாகாணக் கல்விப் பணிப்பாளர், திணைக்களப் பெறுகைகள் குழு (பெரிது)**
**முகவரி:- மாகாணக் கல்வித் திணைக்களம்,வடமாகாணம். செம்மணிவீதி, நல்லூர்.**

தொலைபேசி :- 021-224-2804
தொலைநகல் :- 021-224-2646
மின்னஞ்சல் :- npedufin@gmail.com

(CS.48421)(N-1)



## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் சின்னன் பாலசிங்கம்**

**(தியாகராஜா - தியாகு)**

**திதி: சதுர்த்தசி [15.08.2023]**

மலர்வு 26.10.1950

உதிர்வு 27.07.2022

**"இடியென வந்த செய்தி கேட்டு ஆண்டு ஒன்று ஆனதுவோ?"**

அப்பா உங்களின் ஆத்மா சாந்தியடைய காட்டா விநாயகனின் பாதங்களை வணங்குகின்றோம்.

[illegible] வீதி,
[illegible]ரம், முள்ளியவளை.

**குடும்பத்தினர்.**

(CS/51611)AH-1


## பெரியபுராண சொற்பொழிவு

யாழ், ஓக. 15

பெரியபுராணத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சிவஸ்ரீ பால.திருகுணானந்தக்குருக்க ளின் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவு சிறுப் பிட்டி அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது. சேக்கிழார் பெருமானின் குரு பூஜையைத் தொடர்ந்து சொற்பொழிவை சைவப்புலவர் கமலநாதன் ஆற்றவுள்ளார்.

(ம-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## சண்முகம் விஸ்வநாதர் முருகேசு



தோற்றம் 23.12.1923

மறைவு 16.08.2010

"SVM" என்ற மூன்றெழுத்தால்
எவ்வுலகிலும் அறியப்பெற்ற ஏந்தலே!
ஆண்டுகள் பதின்மூன்று ஆனாலும்
ஐயா! உங்கள் நினைவினிலேயே நாமின்றும்!

தமிழினத்தின் அடையாளமாய்,
காரைநகரின் நிமிர்வாய்
வர்த்தக உலகின் வைரமாய்
அற உலகின் ஆணிவேராய்
ஆன்மீக உலகின் காவலனாய்
உழைப்பில் ஓங்கிய வடிவமாய்
யாழ்ப்பாணத்தின் பொருளாதார அடையாளமாய்
விளங்கியதே "SVM" மூன்றெழுத்தே!

வழமோங்க வாழ வழி செய்த
வள்ளலே உங்கள் வழி நிற்போம்!

உரிமையாளர்
பணியாளர்கள்.

குடும்பத்தினர்.

SVMurugesu - 154, Hospital Road, Jaffna.
S.V.M.(Pvt) Ltd - 122, Damstreet, Colombo 12
S.V.Murugesu (Pvt)Ltd - 106, Hospital Road, Jaffna.
SVM. Distributors (Pvt)Ltd - 160, Stanley Road, Jaffna
SVM. Fuel Mart - 173, 175, Palaly Road, Thirunelvely, Jaffna.
S.V.M.Enterprise (Pvt) Ltd - 288, A9 Road, Karadipokku, Kilinochchi
SVM Rice Mill, Station Road, Chunnakam.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## பரமேஸ்வரி சிவயோகலிங்கம்

(ஓய்வுநிலை உப தபாலதிபர் - மருதடி, பருத்தித்துறை)



எம் உறவொன்று உயிர் நீத்து உருண்டோடியதோ ஓராண்டு
தன் கடமை முடிந்ததென்று கண்மூடியதோ - எங்கள் தெய்வம்

ஆண்டொன்று கடந்தாலும் அழியாது உங்கள் முகம்
எம் வாழ்நாள் உள்ளவரை எந்நாளும் உயிர்வாழும்

வந்தோரை வரவேற்று உள்ளன்போடு உபசரித்து
மகிழ்வோடு வாழ்ந்தகாலம் மறக்கவொண்ணா தருணங்கள்

ஆயிரம் சொந்தங்கள் எமைத்தேடி வந்தாலும்
தேடியும் கிடைக்காத பெருஞ்சொத்து நீயம்மா!

உங்களுடன் வாழ்ந்தபோது புரியாதவை- தெரியாதவை
நீங்கள் இல்லாதபோது தெரிகிறது புரிகிறது - நன்றாக

இதுவே இயற்கையின் நியதி என்றாலும் - எம்
கவலைகளை மறக்கமுடியவில்லை நீயில்லா வெற்றிடத்தில்

உங்களுக்கு வஞ்சகம், சூது, பொறாமை, கோபம் தெரியாது
அன்பினை, பண்பினை, பணிவை கடமைகளை பார்போற்ற
- எமக்கு புரியவைத்தாய்!

உம் உத்தம குணங்களை எண்ணியெண்ணி உருகுகின்றோம்
கனன்று வரும் கண்ணீர் சொரிந்து செலுத்துகின்றோம் - காணிக்கை

இயற்கையின் நிகழ்வுகள் மாறலாம் - மறையலாம்
தாங்கள் வாழ்வாங்கு வாழ்ந்தகாலம் எந்நாளும் மறையாது - மாறாது

உங்கள் ஆத்ம சாந்திக்காய் பரம்பொருளை வேண்டுகின்றோம்
பரமனடி நீ சேர்ந்து சுகம் பெறுவாய் எந்நாளும் என

அன்னாரின் முதலாம் ஆண்டுத் திவசக் கிரியைகள் இன்று (15.08.2023) செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணியளவில் மருதடி, பருத்தித்துறை என்னும் முகவரியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.



தோற்றம் 10.05.1939

மறைவு 28.07.2022

(திதி : ஆடிஅமாவாசை - 15.08.2023 செவ்வாய்க்கிழமை)

மருதடி, பருத்தித்துறை.
Tel : 021 226 3885
077 805 2884

என்றும் உங்கள் நினைவுகளுடன்
கணவர் மற்றும் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கால்பந்தாட்டத்தில் பற்றிக்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 15

**யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்திய, 20 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் சென். பற்றிக்ஸ் அணி கிண்ணம் வென்றது.**

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி மைதானத்தில் அண்மையில் இடம் பெற்ற இந்த இறுதியாட்டத்தில், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஹென்றிஸ் கல் லூரி அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் சென்.பற்றிக்ஸ் சம்பியனானது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, காலிறுதிக்கு முந்திய போட்டியில் இலுப்பக்கடவை மகா வித்தியா லயத்தை 5:1 என்ற கோல் கணக்கி லும், காலிறுதியாட்டத்தில் மானிப் பாய் இந்துக் கல்லூரி அணியை 7:0 என்ற கோல் கணக்கிலும், அரையிறுதி ஆட்டத்தில் தேவரை யாளி இந்துக் கல்லூரி அணியை 3:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக் கது

பரிசளிப்புவிழாவில்வடக்குமாகாண கல்விப்பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ம-20)



## தென்மராட்சிக் கிண்ணம் - 2023 கோலாகலமாக ஆரம்பமாகியது

யாழ்ப்பாணம், ஓக. 15

உதயனின் ஊடக அனுசரணையில் நடத்தப்படும் தென்மராட்சி கிண்ணத்துக் கான பத்து ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடர் மட்டுவில் கண்ணகை விளை யாட்டுக்கழக மைதானத்தில் கடந்த சனிக் கிழமை ஆரம்பமானது.

ஆரம்பநிகழ்வில் விருந்தினர்களாக உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற முன் னாள் உறுப்பினருமாகிய ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்துகொண்டார். அவரு டன் லவ்லி ஐஸ்கிறீம் ஸ்தாபன உரிமையா ளரும் சமூக சேவையாளருமாகிய முத்துக் குமாரசாமி அகிலன், யாழ். நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் சுந்தரமூர்த்தி சிவானந்தன் ஆகியோரும் கலந்துகொண்டு விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

போட்டிகள் லீக் சுற்றுக்களாக சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெறவுள்ளன. (ம-125,26)

## றொக்கர்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 15

உதயனின் ஊடக அனுசணை யில் நடைபெற்று வரும் தென் மராட்சி கிண்ணத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் கைதடி சுப்பர் கிங்ஸை வீழ்த்தியது நுணாவில் றொக்கர்ஸ் அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நுணாவில் றொக்கர்ஸ் அணி முதலில் களத்தடுப் பைத் தீர்மானித்தது. துடுப் பாட்டத்தில் கைதடி சுப்பர் கிங்ஸ் சார்பாக லதுஜன் 21 ஓட்டங்க ளையும், ரூபன் 20 ஓட்டங்க ளையும் பெற்றனர். அந்த அணி 10 ஓவர்களில் 8 இலக் குகளை இழந்து 71 ஓட்டங்க ளைப் பெற்றுக்கொண்டது.

நுணாவில் றொக்கர்ஸ் அணி சார்பாக பந்துவீச்சில் பிரின் சுமன் 4 இலக்குகளையும், அகிபன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 72 ஓட்டங்கள் பெற் றால் வெற்றி என்ற இலக் கோடுதுடுப்பெடுத்தாடிய நுணா வில் றொக்கர்ஸ் அணியினர் 9.4 ஓவர்களில் இலக்கை அடைந்து வெற்றிபெற்றது.

அதிகபட்சமாக பார்த்திபன் 30 ஓட்டங்களையும், கிருபாகரன் 17 ஓட்டங்களையும், மாலவன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்டநாயகனாக பிரின்சுமன் தெரிவுசெய்யப்பட்டார். (ம-26)

## இந்தியாவுடன் இணைந்து பணியாற்றத் தயார்!!!

அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 15

இலங்கைக்கு மிகவும் அருகாமையில் உள்ள நாடு இந்தியாவாகும். தெளிவான பார்வையுடன் இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற தேசிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். களனியில் இடம்பெற்ற மக்கள் சந்திப் பொன்றில் கலந்துகொண்டு உரையாற் றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் கருத்து வெளியிட்ட அவர், நாட்டை நாசமாக்கி, திட்டமிட்ட முறையில் நாட்டை பரிதாப நிலைக்கு இந்த ஆட்சி யாளர்கள் கொண்டு வந்துள்ளனர். பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்த நாடாக மாற்றியுள்ளனர். இவர்களுக்கு எதிராக நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக் தியுடன் கைகோர்ப்பதுடன், எமது அணியை வெற்றிபெறவும் செய்வர்.

நாட்டிற்கு என்ன நேர்ந்துள்ளது என்பதை நாங்கள் முழுமையாக அறிவோம். இந்த அவலநிலையில் இருந்து மக்களை காப் பாற்ற வேண்டும்.

சீரழிந்த அமைப்பை மாற்றாவிட்டால் யார் மாற்றுவார்கள்? இந்த நேரத்தில் நாம் தான் அதனைச் செய்ய வேண்டும். ஊழல்வாதிகள் ஒருபோதும் நாட்டைச் சீர்திருத்தமாட்டார்கள்.

புவியியல் ரீதியாகவும், இந்தியா அருகா மையில் இருப்பதாலும் அரசியல் ரீதியாக செல்வாக்கு செலுத்துவதாலும் சிறந்த தொலைநோக்குப் பார்வையுடன் இந்தி யாவுடன் பணியாற்ற நாம் தயாராகவுள் ளோம் - என்றார். (அ-ஒ.இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** ஆதாயம் அதிகரிக்கும் நாள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த தகவ லொன்று வந்து சேரலாம். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து படைத்தவர்களின் நட்புக் கிட்டும்.

**இடபம்:** கேட்ட உதவிகள் எளிதில் கிடைக்கும் நாள். மதி நுட்பத்தால் மகத் தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர் கள். நிலம் சம்பந்தமாக எடுக்கும் முடிவு களைத் தள்ளி வைப்பது நல்லது.

**மிதுனம்:** இல்லத்திலும், உள்ளத்தி லும் அமைதி கூடும் நாள். எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். தடைப்பட்ட வருமானம் தானாக வந்து சேரலாம்.

**கடகம்:** வருமான உயர்வுக்கு வழி பிறக் கும் நாள். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். உறவினர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும்.

**சிம்மம்:** அலைபேசி மூலம் ஆதாயம் தரும் தகவல் வந்து சேரும் நாள். நினைத் தது நிறைவேறும். உத்தியோகத்தில் உட னிருப்பவர்களின் உதவி கிடைக்கும். வாகன பராமரிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** துணிவும், தன்னம்பிக்கை யும் கூடும் நாள். கூட்டுத் தொழிலைத் தனித் தொழிலாக மாற்றலாமா என்று சிந்திப்பீர்கள். காரியங்களில் அனு [illegible]ாகும். உடல் ஆரோக்கி யம் மேம்படும்.

**துலாம்:** இடமாற்றம் பற்றிச் சிந்திக் கும் நாள். உள்ளம் மகிழும் சம்பவம் இல் லத்தில் நடைபெறும். வருமோ, வராதோ என்று நினைத்த பணவரவொன்று இன்று கைக்கு கிடைக்கலாம்.

**விருச்சிகம்:** எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும் நாள். கண் ணியம் மிக்கவர்கள் கைகொடுத்து உதவ முன்வருவர். தொழிலில் புதிய பணியா ளர்களை சேர்க்கும் எண்ணம் மேலோங்கும்.

**தனுசு:** முன்யோசனையுடன் செயற்பட வேண்டிய நாள். நண்பர்களுக்காக ஒரு தொகையை செலவிடுவீர்கள். ஆரோக்கி யத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்படும். வாக்கு வாதங்கள் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**மகரம்:** திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றம் ஏற்படும் நாள். உடல் நலத்தில் கவனம் தேவை. மறதி அதி கரிக்கும். தன்னம்பிக்கையைத் தளர விட வேண்டாம்.

**கும்பம்:** ஆற்றல் பளிச்சிடும் நாள். ஆத ரவுக்கரம் கொடுப்போர் எண்ணிக்கை உய ரும். நீண்ட நாளைய விருப்பங்கள் நிறை வேறும். நீங்கள் எதிர்பார்த்த ஒருவர் உங்களைத் தேடி வந்து உதவி செய்வார்.

**மீனம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழும் நாள். இல்லத்தினர்களின் ஒத்துழைப்போடு இனிய பணிகளை செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் பாராட்டுகளை பெறுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## செஞ்சோலை...

பகுதிகளிலும் பல தரப்பினாலும் நேற்று உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி முல்லைத்தீவு, வள்ளிபுனத்திலுள்ள செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகத்தில் தலைமைத்துவ பயிற்சிக்காக அழைத்துவரப்பட்டிருந்த பாடசாலை மாணவிகள் தங்கவைக்கப்பட்டிருந்தனர். அதன் மீது சிறிலங்கா வான்படையின் போர் விமானங்கள் அதிகாலை வேளையில் தொடர் குண்டு வீச்சை மேற்கொண்டிருந்தன. இதன்போது 54 மாணவிகளும் 7 பணியாளர்களுமாக 61 பேர் கொல்லப்பட்டிருந்தனர். 129 மாணவிகள் அவயவங்களை இழந்திருந்தனர்.

குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு இலக்கான செஞ்சோலை வளாகத்தின் முன்பாக வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் சுடரேற்றி நேற்றுக்காலை அஞ்சலி செலுத்தினார்.

அதேவேளை, செஞ்சோலை வளாகம் அமைந்துள்ள வள்ளிபுனம்பகுதியில் பிரதான நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

தாயக மற்றும் புலம்பெயர் உறவுகளின் அனுசரணையுடன், தாய்த்தமிழ் பேரவையின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நினைவேந்தல் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு ஆரம்பமானது. குண்டுத்தாக்குதலால் உயிர் நீத்த உடையார்கட்டு மகாவித்தியாலய மாணவியர்களான கனகலிங்கம் நிருஷா, கனகலிங்கம் நிருபா ஆகிய சகோதரிகளின் தாயார் கனகலிங்கம் தவமணி பொதுச்சுடரை ஏற்றிவைத்தார்.

குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த ஏனைய மாணவியர்களுக்கும், பணியாளர்களுக்கும் அவர்களுடைய உறவினர்களால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலர் தூவி, கண்ணீர்சொரிந்து உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவனால், அவரது அலுவலகத்தில் நேற்று மு.ப. 11 மணியளவில் செஞ்சோலை குண்டுத் தாக்குதலில் உயிர் நீத்த மாணவியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மலர் தூவி ஈகச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் வல்வெட்டித்துறையிலுள்ள அவரது அலுவலகத்தில் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றுமதியம் 12 மணியளவில் செஞ்சோலையில் சாவைத் தழுவிய மாணவிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ். பல்கலைக்கழக பிரதான தூபி வளாகத்தில் ஒன்று கூடிய மாணவர்கள் உயிர்நீத்த பாடசாலை மாணவிகளின் உருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தி ஈகச்சுடரேற்றி ஒரு நிமிட அகவணக்கமும் செலுத்தினார்கள். தொடர்ச்சியாக செஞ்சோலை படுகொலையின் நினைவுரை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் சில்வஸ்டர் ஜெல்சினால் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் செஞ்சோலைப் படுகொலையின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை மாலை 5.15 மணிக்கு யாழ்ப்பாணப் பொது நூலகத்துக்கு அருகில் கட்சியின் மகளிர் அணித் தலைவி திருமதி வாசுகி சுதாகரன் தலைமையில் உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ். மாநகரசபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையிலான அணியின் நினைவேந்தல், அவரது அலுவலகத்தில் நேற்று மாலை கடைப்பிடிக்கப்பட்டது.

(அ-ஓ,18,20,26,27,66,100,125,246)

## குருந்தூர்மலையைப்...

குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக கடந்த மாதம் 14ஆம் திகதி தமிழ் மக்கள் பொங்கல் வழிபாட்டுக்குச் சென்றனர். இதன்போது பிக்குகளும் சிங்களவர்களும் பெருமளவில் அங்கு களமிறக்கப்பட்டு தமிழ் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தினர். தொல்பொருள் திணைக்களத்தினரும், பொலிஸாரும் இணைந்து தமிழ் மக்களை அங்கிருந்து வெளியேற்றினர்.

இது தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், கடந்த 8ஆம்திகதி இடம்பெற்றவிசாரணைகளில், தமிழ் மக்களின் பொங்கலுக்கு இடையூறு ஏற்படுத்தமாட்டோம் என தொல்பொருள் திணைக்களத்தினர் நீதிமன்றில் உறுதியளித்திருந்தனர். இதனையடுத்து எதிர்வரும் 18ஆம் திகதி பொங்கலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து பொங்கலுக்கு வழங்கப்பட்ட அனுமதியை உடனடியாக நிறுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார். இதன்தொடர்ச்சியாக குருந்தூர்மலை விகாரையின் விகாராதிபதி கல்கமுவ சாந்தபோது சமூக ஊடகங்களில், குருந்தூர் விகாரையை தீவிரவாதிகள் சேதப்படுத்த உள்ளார்கள். அதனைக் காப்பாற்ற அனைத்து பௌத்தர்களும் அணிதிரளவேண்டும். அதே வேளை 18, 19, 20 ஆம் திகதிகளில் பௌத்த வழிபாடும் இடம்பெறவுள்ளது என்று அறிவித்துள்ளார். (அ-ஓ,18)

## இராணுவ...

நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இராணுவமே என்றும் பொலிஸார் மீது நம்பிக்கை இல்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

கற்கோவளம் பிரதேசத்தில் சட்ட விரோத மணல் அகழ்வு, கஞ்சா கடத்தல் என்பன அதிகரித்து வரும் நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவத்தால் மட்டுமே முடியும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். பருத்தித்துறை பொலிஸார் கஞ்சா கடத்தல்காரர்களிடம் பணத்தை வாங்கி சட்ட விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில்லை எனவும் அவர்கள் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இந்தப் பிரதேச மக்கள் நம்பி இருப்பது இராணுவத்தை மட்டுமே. வெள்ள காலத்திலும் சரி மக்கள் இடர்பாடுகளை எதிர்நோக்கும் பொழுது முன் வந்து உதவுவது இராணுவமே என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவித்தனர்.

இராணுவம் இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையில்தான் நாங்கள் எமது பொருள்களை கடற்கரையில் வைத்து விட்டுச் செல்கின்றோம். இராணுவம் வெளியேறினால் எங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது யார் ?என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

'ஆட்சியாளர்களே இராணுவ முகாம் எங்களுக்கு வேண்டும்' 'ஆட்சியாளர்களே உங்கள் அரசியலுக்காக இராணுவத்தை பலிக்கடாவாக ஆக்காதீர்கள்' ' யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி அவர்களே குறித்த இராணுவ முகாமை அகற்ற முயலவேண்டாம்'. போன்ற வாசகங்களை தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போது இருக்கின்ற இராணுவ முகாம் அகற்றப்பட்டாலும் இதே பகுதியில் இருக்கும் அரச காணி ஒன்றில் இராணுவ முகாமை அமைத்து இந்தப் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறும் அவர்கள் தமது மனுவில் கோரியுள்ளனர்.

(அ-ஓ,23,26,27,100)

## விஷஜந்து...

டிரோன் (வயது-28) திடீரென உயிரிழந்தமைக்கு விஷஜந்து தீண்டியமையே காரணம் என உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

கடமை நிமித்தம் அவர் மடுத் திருவிழாவுக்குச் சென்ற நிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக மடு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார். மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு சடலம் நேற்று கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அவரது உடலில் விஷஜந்து தீண்டியமையால் உடலில் விஷம் பரவி அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மடுத்திருவிழாவில் விஷஜந்துக்களின் தாக்கம் குறித்து எச்சரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஓ,56,213)

## 600 கல்வெட்டுக்கள்...

பேராசிரியர் மென்டிஸ் ரோஹணதீர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், இன்னும் பல கல்வெட்டுக்கள் ஆய்வுக்காக எஞ்சியிருப்பதாகவும் பிரதித் தலைவர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார். தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான நாடாளுமன்ற ஒன்றியத்தின் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோதே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஓ,இ)

## அவசரப்பட்ட...

நாவேந்தன் கௌரிமலர் (வயது-52) என்பவரே உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் தம்பதியினர் பயணித்தபோது, கோப்பாய் சந்தியில் வீதி ஒளிச்சமிக்ஞை விளக்கில், சிவப்பு விளக்கு எரிந்தபோது அவர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்தினார்கள். ஆனால் சிவப்பு விளக்கு ஒளிர முன்னர் ஒளிச்சமிக்ஞையை கடக்க வேண்டுமென அவர்களின் பின்னால் அதிவேகமாக வந்த டிப்பர், முன்னால் மோட்டார் சைக்கிளை நிறுத்திய தம்பதியர் மீது மோதியதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது நிலை தடுமாறி கணவர் மறுபக்கமும், மனைவி டிப்பர் பக்கமும் விழுந்துள்ளனர். கீழே விழுந்தவர்களை பொருட்படுத்தாமல் டிப்பர் முன்னோக்கிச் சென்றதாகவும், இதில் பெண் டிப்பரில் நசியுண்டதாகவும் தெரிவித்தனர். படுகாயமடைந்த பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தார். வலி. கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார்.

(அ-ஓ,26,27,17,125)

## மடுத்திருவிழா...

சித்தி பெற்ற ஆன்மீகத் தலங்களில் ஒன்றான மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலி இன்று செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணிக்கு திருத்தந்தையின் பிரதிநிதி தலைமையில் ஆயர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்க உள்ளனர். இதற்காக நேற்று திங்கட் கிழமை மாலை வேஸ்பர் ஆராதனை ஒப்புக்கொடுக்கப்பட்டது. வழமையான வருடங்களைப் போலவே இந்த வருட மடு அன்னையின் திருவிழாவை சிறப்பிக்கும் வகையில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக்கணக்கான யாத்திரிகர்கள் மடுத் திருத்தலத்துக்கு வருகை தந்துள்ளனர். இதேவேளை- இன்றைய திருவிழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ள உள்ள நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

(அ-ஓ,213)

## ஜப்பான்...

வீழ்ந்தார். அவர் காலை உணவை உட்கொள்ளாமல் வந்திருந்தமையாலேயே மயங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஸ்கந்தபுரம் இலக்கம் 2 அ.த.க. பாடசாலைக்கு ஜப்பானிய மக்களின் நன்கொடையாக வழங்கப்பட்ட புதிய வகுப்பறைக் கட்டடத்தை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக கையளிக்கும் நிகழ்வுக்கு வருகை தந்த இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுசி கிடாக்கியை வரவேற்கும் நிகழ்வில் கலந்துகொண்ட பாண்ட் அணியின் மாணவி திடீரெனத் தூதுவருக்கு முன்னால் மயங்கி வீழ்ந்துள்ளார். கடும் வெயில் மற்றும் காலை உணவு உட்கொள்ளாமை போன்ற காரணங்களாலேயே குறித்த மாணவி மயங்கி வீழ்ந்துள்ளார். மயங்கி வீழ்ந்த மாணவியை உடனடியாக ஆசிரியர்கள் தூக்கிச் சென்றனர். (அ-ஓ,214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர் விமானங்கள், கப்பல்களுக்கு அமைச்சரவை ஊடாகவே அனுமதி

கொழும்பு, ஓக. 15
இலங்கைக்கு வெளிநாடுகளின் போர்க் கப்பல்கள் மற்றும் போர் விமானங்கள் வருகைதரும்போது அதற்கான அனுமதியை அமைச்சரவை ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான யோசனை அமைச்சரவைக்கு விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
இலங்கைக்கு வரும் வெளிநாடுகளின் போர்க்கப்பல்கள் மற்றும் போர் விமானங்களுக்கு அனுமதி வழங்குவதில் ஓர் ஒழுங்குமுறையைப் பின்பற்றுவதற்காவே இத்தகையை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (அ-ஒ,6)

## குளவி தாக்கியதில் முதியவர் உயிரிழப்பு!

குளவி தாக்கியதில் முதியவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.
மானிப்பாயைச் சேர்ந்த நடராசா சந்திரமோகன் (வயது -70) என்பவரே உயிரிழந்துள்ளார்.
காணியைத் துப்புரவு செய்துகொண்டிருந்த வேளை குளவி தாக்குதலுக்கு இலக்காகி இறந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ஒ-27)

## போலந்தில் கைதானோரில் இலங்கையர்களும் அடக்கம்!

பெலாரஸில் இருந்து போலந்துக்கு சட்டவிரோதமாகக் குடியேற முற்பட்டபோது, கடந்த சனிக்கிழமை கைதானவர்களில் இலங்கையர்களும் அடங்குவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.
சோமாலியா, எகிப்து, எத்தியோப்பியா மற்றும் இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 160 பேர் கைது செய்யப்பட்டனர்.
அவர்கள், போலந்துக்குள் சட்டவிரோதமாக உட்பிரவேசிக்க முற்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாக எல்லை அதிகாரிகளைமேற்கோள்காட்டிபோலந்துஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-ஒ,இ)


### மணமகள் தேவை

1991 இல் பிறந்த இந்து கௌரவ குலம் சுயதொழில் புரியும் 7இல் சூரியன் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. (பாவக்கிரகம் 29 1/4) (நட்சத்திரம் - உத்தரம்)
077 063 4154

### வாடகைக்கு விடப்படும்

நுணாவில் 190 ஆம் கட்டையடியில் 3 கடைகள் வாடகைக்கு விடப்படும். கடைக்கு மேல் உள்ள மாடியில் 2 வீடுகள் வாடகைக்கு விடப்படும். (CS 5181)(K-1)
தொடர்பு : 077 939 7713
077 467 5160

### தேவை

கிளிநொச்சி மாவட்டத்திற்கு
விநியோகஸ்தர் விற்பனை
பிரதிநிதி தேவை.
தொடர்பு:
077 436 0596


## நான்காம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 28 • 02 • 1935



இறைவன் அடியில் 31 • 07 • 2019

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும்
அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் செல்லத்துரை கணபதிப்பிள்ளை

(முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர், கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.)

திதி : ஆடி அமாவாசை

அன்புள்ள அப்பா.....
ஆண்டுகள் எத்தனை ஆனாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எம்முடன்
நீங்கள் வாழ்ந்து காட்டினீர்கள்.
நீங்கள் காட்டிய பாதையில் நாம் செல்கிறோம்.
உங்கள் ஆத்மா அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார்
பாதங்களில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

"செந்தில்"
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.

(CR 40435) A-1

# மரண அறிவித்தல்

## திருமதி சிவகந்தராசா நிர்மலாதேவி



தோற்றம் 03.11.1955
மறைவு 11.08.2023

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகந்தராசா நிர்மலாதேவி கடந்த (11.08.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகந்தராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சிவமணி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சிவஞானம் கனகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான ஜெயரட்ணம், குணரத்தினம், தவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரியதர்சன், குபேரன் (சக்தி ஹோட்டல், குபேரா மொபைல்ஸ்), நித்தியா (பிரான்ஸ்), செந்தூரன் (S.V.M. முருகேசு Unilever) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திவேதிகா, சிரேஸ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜர்ஷகன், பிரஜயா, சஜேஸ், மிரேஸ் ஆகியோரின் ஆசை பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சைவப் பாடசாலை வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
077 036 5647
077 135 1217

(cs.) (N-1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org